Cambridge International A Level

**Cambridge International Examinations**
Cambridge International Advanced Level

**TAMIL** **9689/02**

Paper 2 Reading and Writing **October/November 2016**

**1 hour 45 minutes**

INSERT

*9509522353-I*

**READ THESE INSTRUCTIONS FIRST**

This Insert contains the reading passages for use with the Question Paper.

You may annotate this Insert and use the blank spaces for planning.
This Insert is **not** assessed by the Examiner.

**முதலில் என்ன செய்ய வேண்டும் என்பதைப் படிக்கவும்**

கேள்வித்தாளுடன் பயன்படுத்தவேண்டிய பத்தி இங்கே எழுதப்பட்டு இருக்கும்.

நீ இந்த இடத்தில் எப்படி எழுதவேண்டும் என்று உன் எண்ணங்களை இங்கே எழுதலாம்.
இதைத் தேர்வு அதிகாரி பார்க்க மாட்டார்.

This document consists of **5** printed pages and **3** blank pages.

DC (NH) 120745/3
© UCLES 2016

CAMBRIDGE International Examinations

**[Turn over**

## பகுதி 1

கட்டுரை **ஒன்றைப்** படித்துவிட்டு **1, 2, 3 கேள்விகளுக்கு** கேள்வித்தாளில் விடை அளிக்கவும்.

### கட்டுரை 1

வெளிநாடுகளுக்குப் பிரயாணம் செய்வது என்பது பல சமயங்களில் நாம் சற்றும் எதிர்பாராத வகையில் எமது மனதைப் பிரமிக்க வைத்து மகிழ்ச்சிப்படுத்துவதாக அமையும். இத்தகைய நினைவுகள் எமது மனதை விட்டு நீங்காதவையாக, பல வருடங்களுக்கு எமக்கு மகிழ்ச்சியை ஏற்படுத்துபவையாக விளங்கும். வெளிநாட்டுப் பிரயாணங்களின்போது எழுச்சியூட்டி மகிழ்ச்சிப்படுத்தும் விடயங்கள் நபருக்கு நபர் வேறுபட்டதாக அமையும். இங்கிலாந்திலிருந்து பர்மாவின் பகானிற்குச் சுற்றுலாவிற்குச் சென்ற ஜூலி என்ற பெண் கருத்துத் தெரிவிக்கும்போது, ‘பகானில் வெப்பக் காற்றின் மூலம் ஆகாயத்தில் பயணப்படும் பலூனில் பயணம் செய்து கி.பி பதினோராம் நூற்றாண்டிற்கும் பதின்மூன்றாம் நூற்றாண்டிற்கும் இடைப்பட்டதான காலத்தில் இருந்த பல நூற்றுக்கணக்கான கோயில்களையும் இடங்களையும் ஆகாயத்திலிருந்து பார்த்தமை உலகத்தில் எங்கும் கிடைக்காத ஒரு அற்புத அனுபவமாக அமைந்தது. இதே பிரதேசத்தில் எனக்கு ஏற்பட்ட மிகக் களைப்பான இருபது மணி நேர இரயில் பயணத்தை இப் பலூன் பயணமானது ஈடு செய்தது. நீர்த் தடாகம் ஒன்றின்மேல் பிரயாணம் செய்யும்போது நீரில் பார்க்கக்கூடியதாக இருந்த எமது பறக்கும் பிம்பமானது புதுவித அனுபவத்தை மனதில் ஏற்படுத்தியது’ என்று கூறினார்.

இந்தியாவைப் பிறப்பிடமாகக் கொண்ட மகேந்திரன் விடுமுறைக் காலங்களில் வெளிநாட்டுச் சுற்றுலாக்களை மேற்கொள்வதற்குப் பெரு விருப்பம் கொண்டவர். அவர் பேட்டியொன்றிற்குப் பதிலளிக்கும்போது, ‘விமானப் பயணம் பிரபல்யமானதுடன் பலரும் பல நாடுகளைக் கண்டறியும் நோக்குடன் வெளிநாட்டுப் பிரயாணங்களை மேற்கொள்ளத் தொடங்கியுள்ளனர். எந்த நாட்டுக்கு நான் பயணப்பட்டாலும் விமானத்திற்குள் ஏறியதும் எனது மனம் மிகவும் அமைதியடையும். இது எனது பயணத்திற்கான மிகச் சிறந்த ஆரம்பமாக அமையும். வெளிநாடுகளுக்குப் பயணப்படும்போது நான் எனது தொழிலிலுள்ள வேலைப்பளுவை மறக்கக்கூடியதாக இருக்கும். அத்துடன் தொழில் புரியும் இடத்தில் நிலையாக அமர்ந்திருந்து தொழில்புரியும் காரணத்தினால் உடலுக்குத் தேவையான உடற்பயிற்சிகள் கிடைப்பதில்லை. எனவே, நான் வெளிநாடுகளுக்குப் பயணப்படும்போது அவ்விடங்களில் பல தூரங்களுக்கு நடக்கக்கூடியதான இடங்களையே தெரிவு செய்வேன். அனைத்திற்கும் மேலாக, நான் ஒரு புத்தகத்தைப் பிரசுரிக்க உள்ளதால் ஏனைய கலாச்சாரங்களையும் மக்களையும் நுண்மையாக அவதானிப்பதற்கு எனது வெளிநாட்டுச் சுற்றுலாக்கள் உதவுகின்றன. உலகம் சிறியதாகத் தோற்றமளித்தாலும், மிகச் சிறந்த வெளிநாட்டு அனுபவங்களை மக்கள் பெற்றுக்கொள்வதற்கான சந்தர்ப்பங்கள் அதிகரித்துக்கொண்டு செல்கின்றன’ என்று கூறினார்.

வெளிநாட்டுச் சுற்றுலாவானது பிற நாட்டவர்களது நாகரீகத்தையும் பண்பாட்டையும் முழுமையாக அறிந்து கொள்வதற்கான சந்தர்ப்பத்தை ஒருவருக்குக் கொடுக்கும். எனினும், வெளிநாட்டுப் பிரயாணங்களை மேற்கொள்வதற்கு ஏனைய காரணங்களும் உள்ளன. புதிய மொழியைக் கற்பதற்காகவும் பொருட்களை விற்பனை செய்வதை ஊக்குவிப்பதற்கான வர்த்தக நோக்கம் கொண்டதுமான வெளிநாட்டுப் பிரயாணங்களையும் மக்கள் மேற்கொள்வார்கள். பிற தேசத்திலுள்ள உறவினர்களையும் நண்பர்களையும் பார்ப்பதற்காகப் பிரயாணப்படுபவர்கள் நிச்சயமாகப் பிரயாணப்படும் நாட்டினது கலாச்சாரத்தை அறியும் நோக்கத்தை அல்லது பிற தேச உணவு வகைகளைப் புசித்துப் பார்ப்பதைப் பிரதான நோக்கமாகக் கொண்டு வெளிநாட்டுப் பிரயாணங்களை மேற்கொள்வதில்லை.

சமையற்கலையைக் கற்கும் நோக்கத்தோடு மேற்கொள்ளப்படும் வெளிநாட்டுப் பிரயாணங்கள் தற்போது பிரபலமாகி வருகின்றன. சமையற்கலையை மகிழ்ச்சிமிக்கச் சூழலில் கற்க விருப்பம்கொண்டு இத்தாலிக்கு எட்டு நாட்கள் விடுமுறையில் சென்ற தியாகராசா என்ற நபர் தனது அனுபவங்களைக் கூறும்போது, ‘பதினான்கு பேரடங்கிய எமது குழுவுக்குக் கிராமியச் சூழலில் மிகவும் அமைதியான பண்ணை நிலம் சூழவுள்ள ஹோட்டல் ஒன்றில் தங்குமிட வசதிகள் தனித்தனியாகச் செய்து தரப்பட்டன. தினமும் எமது காலை நேரமானது பிரதான சமையற்கலை நிபுணரோடு உள்ளூர்ச் சந்தைகளுக்குச் சென்று சமையலுக்குத் தேவையான பொருட்களைக் கொள்வனவு செய்வதுடன் ஆரம்பிக்கும். இது பல வகைகளிலும் உள்ளூர்க் கலாச்சாரத்தைப் புரிந்து கொள்வதற்கும், இத்தாலிய மொழிச் சொற்கள் பலவற்றைக் கற்றுக் கொள்வதற்கும் எமக்குப் பேருதவி புரிந்தது. பல சமயங்களில் பிரதான சமையற்கலை நிபுணர் எம்மை வைன் தொழிற்சாலைகளுக்கும், பால் கட்டித் தொழிற்சாலைகளுக்கும், ஒலிவ் எண்ணைத் தொழிற்சாலைகளுக்கும் அழைத்துச் சென்று அவை பற்றிய அறிவையும் எமக்கு

ஏற்படுத்தினார். மதியம் ஆரம்பிக்கும் எமது சமையல் வகுப்புகள் மாலை நேரத்தில் நிறைவடையும். பிரதான சமையற்கலை நிபுணர் எமக்கு முன்னால் அமர்ந்திருந்து சமையலின் முக்கியமான தருணங்களில் முக்கிய அறிவுறுத்தல்களை எமக்குத் தருவார். தினமும் மாலை நேரத்தில் எமக்குப் பரிமாறப்பட்ட உணவானது இத்தாலிக்கான உணவுக்கலையை மிகச் சிறந்த முறையில் எமக்கு உணர்த்துவதாக அமைந்திருந்தது' என்று கூறினார்.

வெளிநாட்டுச் சுற்றுலாக்கள் வாழ்க்கையை முழுமையாக்குவதோடு உளவியல் நலத்துக்கும் காரணமாக அமையும். எனினும், சுற்றுலாத்துறையினால் இயற்கை வளங்கள் பாதிக்கப்படலாம். அத்துடன், கழிவுப் பொருட்களினால் சூழலியல் பாதிப்புகளைச் சுற்றுலாத்துறை ஏற்படுத்தலாம். எவ்வாறாயினும், வெளிநாட்டுச் சுற்றுலாக்களுக்கும் மகிழ்ச்சியான வாழ்க்கைக்குமிடையிலான தொடர்புகள் பற்றியதான பல ஆய்வுகள் பல்கலைக்கழக மட்டத்தில் மேற்கொள்ளப்படுகின்றன. வெளிநாட்டுச் சுற்றுலாக்கள் தற்போது பணவசதி மிக்கவர்கள் மத்தியில் ஒரு நாகரீகமாக உருப்பெற்றுள்ள போதிலும், அவை மனமகிழ்ச்சிக்குக் காரணமாக உள்ளன என்பதை நாம் மறுக்க முடியாது.

## பகுதி 2

இப்பொழுது இரண்டாம் கட்டுரையைப் படித்துவிட்டு **4, 5 கேள்விகளுக்கு** கேள்வித்தாளில் விடை அளிக்கவும்.

### கட்டுரை 2

மக்கள் விடுமுறைக்காகப் பிரயாணப் படும்போதோ அல்லது புலம்பெயர்ந்து செல்லும்போதோ தான் பழக்கத்திற்குட்படாத வாழ்க்கை முறைகளைக் கண்டு தனக்குள்ளாகவே மன உளைச்சலுக்குட்படுவதோடு தனது சுய கலாச்சாரத்தை மாற்றியமைக்கும் நிலைக்குட்படும் தன்மையைக் 'கலாச்சார அதிர்வு' என்று கூறுவார்கள். கலாச்சார அதிர்வானது ஒருவருக்கு விரக்தி, மனக் குழப்பம், மன அழுத்தம், பிறருக்கு முன் திக்குமுக்காடல் போன்றவற்றை ஏற்படுத்தும். ஆஸ்திரேலியாவுக்குத் தனது மேற் பட்டப்படிப்பை மேற்கொள்வதற்காகச் சென்ற பல்கலைக்கழக விரிவுரையாளரான ஷோபா பட்டேல் தனது அனுபவத்தைக் கூறும்போது, 'நான் ஆஸ்திரேலியாவில் முதலாவதாக எனது குடும்பத்தினரைப் பிரிந்து வருந்தினேன். விரிவுரையாளராக எனக்கு இருந்த பெரிய மதிப்பையும் சமூக அந்தஸ்த்தையும் இழந்தேன். நான் பேசிய ஆங்கில உச்சரிப்பை விளங்கிக் கொள்வதற்கு ஆஸ்திரேலிய மக்கள் மிகவும் சிரமப்பட்டார்கள். ஆஸ்திரேலிய மக்களது ஆங்கில உச்சரிப்பு முறையை விளங்கிக் கொள்வதற்கு எனக்குப் பல மாதங்கள் எடுத்தன. ஆஸ்திரேலியாவின் கடும் குளிர் காலம் எனக்குள் விரக்தியை ஏற்படுத்தியது. எனினும் ஆஸ்திரேலியக் கலாச்சாரத்துடனான எனது நான்கு வருடப் பழக்கமானது எனக்குக் கல்வியில் நல்ல பலனையும் சிறந்த எதிர்காலத்தையும் தந்துள்ளது.' என்று கூறினார்.

கலாச்சாரப் பாதிப்புக்கு உட்பட்டவர்கள் இரண்டு வகையான தெரிவுகளை மேற்கொள்வதற்கு வாய்ப்புண்டு. புதிய கலாச்சாரத்திற்கு ஏற்ற வகையில் தம்மை மாற்றியமைத்துக் கொள்பவர்கள் முதலாவது வகையினராவர். இவர்கள் புதிய கலாச்சாரத்தைக் கூர்மையாக அவதானிப்பதிலே வல்லவர்களாக இருப்பார்கள். அத்துடன் புதிய கலாச்சாரம் பற்றிய விபரங்களைப் பிறரிடம் கேட்டறிவார்கள். அது மட்டுமல்லாது, அது பற்றிய நூல்களை வாசித்துப் போதியளவு புரிந்துணர்வையும் வளர்த்துக்கொள்வார்கள். மேலும், இவர்கள் அந் நாட்டுக்குரிய மொழியையும் கற்று பிரயாணப்பட்ட நாட்டின் கலாச்சாரத்தை ஏற்றுக்கொள்வதிலே வெற்றி பெறுவார்கள். இரண்டாவது வகையினர், புதிய கலாச்சாரத்தைக் கடுமையாக விமர்சனம் செய்து, தமது சுய கலாச்சாரத்தை நியாயப்படுத்தி, புதிய கலாச்சாரத்திலிருந்து விலகிக் கொள்வார்கள். இவர்கள் புதிய கலாச்சாரத்தை ஏற்றுக்கொள்ளாதவர்களாகத் தனிமைப்படுத்தப்பட்டவர்களாக ஆகிவிடுகின்றனர். இந்தியாவிலிருந்து ஜெர்மனிக்குக் கல்வி கற்கும் நோக்குடன் சென்ற ஒரு மாணவர், 'ஜெர்மனியில் அனைத்தும் எனக்குப் புதுமையாக இருந்தன. எதுவுமே எனக்கு உரிமையற்றவை என்ற எண்ணம் எனக்கு ஏற்பட்டது. தூரத்திலிருந்து அழகான ஒரு சினிமாவைப் பார்ப்பது போல அனைத்தும் எனக்குத் தெரிந்தன.' என்று கூறினார்.

பிற நாடுகளுக்கு நீண்ட கால நோக்குடன் பிரயாணம் செய்பவர்கள் பிரயாணத்திற்கு முன்னராக அந் நாட்டைப் பற்றியும் அந் நாட்டின் கலாச்சாரத்தைப் பற்றியும் வாசித்தறிந்து கொள்வது கலாச்சார அதிர்வைக் குறைத்துக்கொள்வதற்கான தற்காப்பு வழிமுறையாக இருக்கும். அத்துடன், செல்லும் நாட்டில் அவர்கள் தங்குமிடத்தைச் சிறந்ததாகவும் தமது செலவுக்கு ஏற்றதாகவும் முன்னரேயே தெரிவு செய்து கொள்வது சிறந்த சுற்றுச் சூழலை அவர்களுக்கு வழங்கி பிற நாட்டில் நல்லவர்களுடன் பழகும் வாய்ப்பைக் கொடுக்கும். மேலும், தமக்கு மிக நெருக்கமானவர்களது புகைப்படங்களைத் தம்முடன் எடுத்துச்செல்வதும் தொலைபேசி, அஞ்சல், கணினி மூலமாக அவர்களுடன் தொடர்புகளை அடிக்கடி மேற்கொள்வதும் பயன்தருவதாக இருக்கும். சில நாடுகளில் மருத்துவத்துறை தனியார்மயப்பட்டதாகக் காணப்படும். அத்தகைய நாடுகளில் நோய்களுக்கு சிகிச்சை பெறுதல் என்பது பணம் சார்ந்த விடயமாகக் காணப்படும். அத்தகைய நாடுகளுக்குப் பிரயாணம் செய்பவர்கள் தங்களுடன் தமக்குத் தேவையான மருந்துகளை இயலுமானவரை கொண்டுசெல்லுதல் தேவையற்ற மன உளைச்சலைக் குறைப்பதாக இருக்கும்.

பிற நாடுகளில் பல காலமாகத் தங்கியிருந்து தொழில் புரிந்து அல்லது கற்று அதன் நிறைவின் பின்னராகத் தமது நாட்டிற்கு மீளச் செல்பவர்கள் தமது சுய கலாச்சாரத்தினாலேயே அதிர்வுக்குள்ளாகக் கூடும். உதாரணமாகத் தனது தாய் நாட்டிற்கு மீளச் செல்பவர் தமது உறவினர்கள் முன்னர் அன்னிய மொழியைத் தவறுதலாகப் பேசலாம். இத்தகைய பேசும் முறையானது தாய் நாட்டிற்கு மீளச் செல்பவரினால் இயல்பாகச் செய்யப்பட்டாலும் மற்றவர்கள் இதை ஆடம்பரத்தைக் காட்டும் ஒரு செயலாகக் கருதலாம். அத்துடன், தாய் நாட்டிற்குத் திரும்பும் பலர் சமுதாய மனப்பாங்கில் மாற்றங்களை எதிர்கொள்ளலாம். பிரயாணப்படுவதற்கு முன்னர் இருந்த அதே முறையான நட்பையும் உறவையும் எதிர்பார்த்துச் செல்லும் பலர் ஏமாற்றத்திற்கு உள்ளாவதுண்டு. மேலும், அன்னிய நாட்டில் தான் பயன்படுத்திய உடைகளைத் தாய் நாட்டில் அணிய ஒருவர் விரும்பினால், அது நகைப்புக்குரியதாக அல்லது அசாதாரண நடைமுறையாகப் பலருக்கும் தோன்றலாம். இவ்வாறான நிலைகளை ‘மறுதலைப்பட்ட கலாசார அதிர்வுகள்’ என்று அழைப்பர்.

© UCLES 2016 

**BLANK PAGE**

© UCLES 2016 

**BLANK PAGE**

© UCLES 2016 

**BLANK PAGE**

Permission to reproduce items where third-party owned material protected by copyright is included has been sought and cleared where possible. Every reasonable effort has been made by the publisher (UCLES) to trace copyright holders, but if any items requiring clearance have unwittingly been included, the publisher will be pleased to make amends at the earliest possible opportunity.

To avoid the issue of disclosure of answer-related information to candidates, all copyright acknowledgements are reproduced online in the Cambridge International Examinations Copyright Acknowledgements Booklet. This is produced for each series of examinations and is freely available to download at www.cie.org.uk after the live examination series.

Cambridge International Examinations is part of the Cambridge Assessment Group. Cambridge Assessment is the brand name of University of Cambridge Local Examinations Syndicate (UCLES), which is itself a department of the University of Cambridge.